# சர்வாதிகாரத்திற்கு விழுந்த சம்மட்டிஅடி!

திராவிட இயக்கத்தின் முக்கிய கொள்கையே மத சார்பின்மை, சமூக நீதி, ஜனநாயகம் திளைக்க செய்வது ஆகும். ஆனால் உலகில் மிகப்பெரிய ஜன நாயக நாடான இந்திய பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க. ஆட்சி 2014ல் அமைந்த காலத்திலிருந்து சர்வாதிகாரம் கோரத் தாண்டவம் ஆடு கிற நாடாக மாறத் தொடங்கியது.

2019 தேர்தலில் 303 இடங்களைக் கைப்பற்றியதால் கர்வம் தலைக்கேறி ஒன்றிய பா.ஜ.க. அரசு தனக்கு பிடிக் காதவர்கள் மற்றும் விரும்பாதவர்கள் குறிப்பாக சிறு பான்மை சமூகத்தினர் மீது கக்கிய விஷம் கொஞ்சம் நஞ்சமல்ல. ஏவி விட்ட அடக்குமுறைகளோ அநியாயமோ அநியாயம்.

உதாரணத்திற்கு ஒரு பில்கிஸ் பானு குடும்பம் பட்ட பாடு போதும். அவளது ஒரு வயது குழந்தை சுவற்றில் இரண்டு கால்களையும் பிடித்து அடித்துக் கொல்லப்பட்ட விதம் நல்மனம் கொண்டவர்களின் இதயம் இரத்தத் தைக் கக்கிடத்தான் செய்யும். கர்ப்பிணியாக இருந்த பில்கிஸ்பானு கதற கதற கூட்டு பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதும், அவரது குடும்ப உறுப்பினர்கள் கொல் லப்பட்ட விதமும் கொடுமையிலும் கொடுமை.

கில்லட்டின் கொலைக்காக உலகையே அதிர வைத்த லூயி மன்னன் காலத்திலும், அறுபது லட்சம் யூதர்களை மட்டுமின்றி இலட்சக்கணக்கான மக்களை கொன்றும் மகிழ்ந்த ஹிட்லர் காலத்திலும், கோர கொலைகளுக்கும் கொடூர அடக்கு முறைகளுக்கும் காரணம் ஆனதால் முச்சந்தியில் வைத்து அடித்து இழுத்து வரப்பட்ட தன்நாட்டு மக்களாலேயே கொல்லப்பட்ட முசோலினி காலத்திலும் கூட இப்படி பச்சிளம் குழந்தைகள் படுபாவித்தனமாக சுவற்றில் அடித்துக் கொல்லப்பட்டதில்லை. கொலையாளிகள் முன்கூட்டியே விடு விக்கப்பட்டு பா.ஜ.க.வினர் அவர்களுக்கு தந்த வர வேற்பும், மாலை அணிவிப்பும் மன்னிக்க முடியாதது.

**வி.பி.கலைராஜன்**
கழக இலக்கிய அணிச் செயலாளர்



ஆனால் அகிம்சைக்காக உலகப் புகழ் பெற்ற மகாத்மா காந்தி பிறந்த நாட்டில் இப்படிப்பட்ட சர்வாதிகார செயல் நடந்து ஜனநாயகம் ஒழிக்கப்பட்டது ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி காலத்தில் தான் நடந்தேறியது. மக்கள் சக்தியால் மௌனமாக வேடிக்கை பார்க்க தான் முடிந்தது. அதை யும் மீறி பேசினால் இ.டி பாயும், சி.பி.ஐ சிறைக்குள் தள் ளும், ஐ.டி ஆவட்டம் போடும். மகாத்மாவை கொன்ற கோட்சே கூட்டம் இப்படி கொலை வெறி தாண்டவமாடி னர். கொலை யாளி கோட்சேவுக்கு பா.ஜ.க.வினர் சிலை வைக்க வேண்டுமென்கின்றனர்.

அதனால் தான் 2024 நடந்த முடிந்த தேர்தலில் 400 எம்.பிக்கள் எதிர்பார்ப்பு 370 எம்.பிக்கள் நிச்சயம் என்ற பிரதமர் மோடி மூச்சு முட்டக் கத்தினார். முதல் இரண்டு கட்டத் தேர்தல் முடிந்தவுடன் அவருக்கு இந்தியா முழுவ தும் எதிர்ப்பு நிலைதான் உருவாகியுள்ளது என்று தகவல் வர அடுத்தடுத்த தேர்தல்களில் பிரச்சாரத்திற்கு போனவர் மதம் கொண்ட யானை பிளிருவதைப் போல பித்துப் பிடித்தவராய் பிதற்ற ஆரம்பித்தார்.

70 எம்.பிக்களையாவது பா.ஜ.க. பெறும் மாநிலம் என்ற உத்தரபிரதேசத்தில் பாதியை கூட பெற முடியாமல் பரிதாபத்திற்குரிய நபராக பார்க்கப்பட்டார் பிரதமர் மோடி. உச்சந்தலை வரை உஷ்ணமாகி உளறல் நாயகரானார். ஒரு பிரதமர் எப்படியெல்லாம் பேசக்கூடாதோ அப்படி யெல்லாம் பேசினார்.

ராகுல் காந்தி பிரதமராவதை பகை நாடான பாகிஸ் தான் விரும்புகிறது என்று நஞ்சை நாவினால் கக்கினார். 500 ஆண்டுகால விருப்பம் இப்போது நிறைவேறியுள்ளது என்று பாலராமருக்கு சிலை வைத்து பெருமை பேசி னார். பின்னர் அவரே ராமர் கோயிலை புல்டோசர் மூலம் இடித்துத் தள்ளி விடுவார்கள் என்று புனை சுருட் டைப் பொய்யாக அவிழ்த்து விட்டார்.

அதோடு மட்டுமா இஸ்லாமியர்கள் இந்திய நாட்டு மக் கள் என்பதை மறந்து ஊடுருவல்காரர்கள் என நயவஞ் சகத்தோடு உளறிக் கொட்டினார். இந்து மக்களின் சொத் துக்களைப் பிடுங்கி இஸ்லாமியர்களுக்கு இந்தியா கூட்டணி தரப் போகிறது என்று தேர்தல் ஆணையத்தின் சட்டத்திற்குப் புறம்பாக மதப்பிளவை அரசியலாக்கி வாக்கு களை அறுவடை செய்யலாம் என்று முயற்சித்தார். இஸ் லாமியர்களுக்கு தனி பட்ஜெட் போடப் போகிறார்கள் என்று புளுடா விட்டார்.

காங்கிரஸ் தேர்தல் அறிக்கை முஸ்லிம் லீக் அறிக்கை போல் இருக்கிறது என்று ஏளனம் செய்தார். இல்லை! இல்லை! ஏமாற்று வேலை புரிந்தார். பதட்டத்தில் பாவம் மோடி எருமை மாட்டைக் கூட விட்டு வைக்கவில்லை ஒரு எருமை மாட்டைப் பிடித்து இஸ்லாமியர்களிடம் காங் கிரஸ் கொடுத்து விடும் என்றார்.

பசுவுக்கு தான் பா.ஜ.க. வினர் பாதுகாவலர்கள் என்று நினைத்தால் எருமை மாட்டுக்கும் தாங்களே பாதுகாவ லர்கள் என்று பேசி நிரூபித்தார். பசுவின் பெயரில் பா.ஜ.க. ஆட்சியில் கொல்லப்பட்டவர்கள் பெரும்பாலும் இஸ்லாமியர்கள் மற்றும் தலித்கள் தான்.

ஒடிசா மாநில ஜெகந்நாதர் கோயிலின் கருவூல சாவியை தமிழன் திருடி தமிழ்நாட்டுக்கு அனுப்பி விட் டான் என்று தமிழர்களுக்கு திருட்டுப் பட்டம் தந்தார். பாவம்! பிரதமர் மோடி வரலாறு சரியாக படிக்காதவர். இமயம் வரை போர் தொடுத்து சென்று தமிழர்களை இழிவாக பேசிய கனக விஜயர் தலைகளில் கண்ண கிக்கு சிலை எடுக்க கற்களை சுமக்க வைத்து அழைத்து வந்த வீரப் பரம்பரை தமிழர் பரம்பரை என்பதை யாரும் அவருக்கு சொல்லித் தரவில்லை. பா.ஜ.க. தமி ழகத்தில் 40 தொகுதிகளிலும் நாக்குத் தள்ளியது தான் மிச்சம். இந்தியா கூட்டணி இமாலய வெற்றியாக 40 தொகுதியிலும் வென்றது. அதற்கு கழகத் தலைவர் தள பதி அவர்களின் உழைப்பே முழுமுதற்காரணம்.

எஸ்.சி, எஸ்.டி, ஓ.பி.சி ஒதுக்கீட்டில் 15 விழுக்காட்டை முஸ்லிம்க ளுக்கு பிடுங்கி தர போகிறது காங்கிரஸ் என்று மணலில் கயிறு திரித்தார். கட்டிய மனைவியைத் தான் மறைத்து கண்ணீரும் கம்பலையுமாக விட்டா ரென்றால் என்ற தாய் தந்தையையே தனது பெற்றோர் கள் இல்லையென்று இழிவுபடுத்தும் வண்ணம் நான் பயாலாஜிக்கலாக பிறக்கவில்லை. நான் கடவுளால் படைக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்ட அவதார புருஷர் என்று தன்னைத் தானே அறிவித்துக் கொண்டார்.

இப்படி அவரது உளறல்களை பார்த்து உலகம் சிரித் தது. தன் நாட்டு சொந்த மக்களையே இப்படி வெறுக்கும் மனிதரா இந் திய பிரதமர் மோடி என்று ஏளனத்துடன் பார்த்த னர். ஆனால் இவ்வளவு பேசிய பிரதமர் மோடி ஒரு கட்டத்தில் இஸ்லாமியர்களைப் பற்றி நான் தவறாக ஒன்றும் பேசவில்லை என்று மிகப்பெரிய பொய்யை ஜப்பான் மீது வீசப்பட்ட அணுகுண்டைப்போல் வீசினார். அவர் தான் நம் பிரதமர் மோடி.

வண்ணமயில் அமர்ந்த இடத்தில் வல்லூறா! சிங்கம் அமர்ந்த இருக்கையில் சிறு நரியா! மணக்கும் மல் லிகை இருந்த இடத்தில் எருக்கம் பூவா! பந்தயகுதிரை பாய்ந்த இடத்தில் மண்குதிரையா? ஆம் வன்மம் மற்ற வாஜ்பாய் அவர்கள் இருந்து ஆட்சி செய்த இடத்தில் நரேந்திர மோடியா? இது சரியா? நாட்டிற்கு நல்லதா? கங் கையும், காவிரியும் புனித ஆறுகளாய் பாய்ந்திடும் நாட் டில் மதத்தினால் மக்களை மோத விட்டு இரத்த ஆறு களை பார்க்கத் துடிக்கும் கூட்டத்தை நாம் மீண்டும் ஆள விடலாமா? என்று மக்கள் சிந்திக்கத் தொடங்கினர்.

பா.ஜ.க. எந்த இடங்களையெல்லாம் தங்கள் கோட் டைகள் என்று நம்பினார்களோ அங்கெல்லாம் மக்க ளின் கோபக் கனல் அம்புகளாய் மாறி அந்த கோட்டை களில் ஓட்டைகளை போட்டது. ஓட்டை விழுந்த கப்பல் ஊர் வந்து சேருமா? என்ன ஆச்சரியம் கரை வந்து சேர்ந்தது.

272 எம்.பிக்கள் இருந்தால் தனி மெஜாரிட்டியுடன் ஆட்சி செய்யலாம் என்று நிலை இருக்க கருத்துக் கணிப் புகள் என்ற பெயரில் ஒரே எண்களை 340 முதல் 350 வரை பா.ஜ.க. தனித்து வெற்றி பெறும்! ஆட்சி அமைக் கும்! என்று தொடர்ந்து கூறி வந்த போதும் 240ஐ எட்டிப் பிடிக்க மோடி குட்டிக்கரணம் போட வேண்டி வந்தது.

ராஜபுத்திரர்கள், ஜாட், குரும்பர், தலித், சிறுபான்மை யினர், தமிழர்கள், யாதவர்கள் என்று பெரும்பான்மை மக்களின் வெறுப்புக்கு ஆளான பிரதமர் மோடி என்ற கப்பல் சந்திரபாபு நாயுடு, நிதிஷ்குமார் என்ற இரண்டு துடுப்புக்களால் கரை சேர்ந்துள்ளது. ஆனாலும் பா.ஜ.க.வினருக்கு இஸ்லாமியர் மீது வன்மம் குறைய வில்லை. ஆம் ஒன்றிய கூட்டணி ஆட்சியில் ஒரு அமைச்சர் கூட இஸ்லாமியர் இல்லை. இது சுமார் 21 கோடி இஸ்லாமியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி.

புதிய வாக்காளர்கள் அதாவது இளம் தலைமுறையி னர் பா.ஜ.க.விற்கு வாக்களிக்க வில்லை 2 கோடி பேருக்கு வருடத்திற்கு வேலை என்று பொய் சொல்லி ஆட் சிக்கு வந்த மோடி 20 கோடி பேருக்கு வேலை தந்திருக்க வேண்டும். தந்தாரா? எத்தனை பேருக்கு வேலை தந் தார் என்று கேள்வி கேட்டு பா.ஜ.க.வை புறக்கணித்தனர்.

85 கோடி பேர் ரேஷன் பொருளை நம்பி உள்ளனர். 25 கோடி மக்கள் ஒருவேளை சோற்றிற்கும் வழியற்று பட்டினி சாவுக்கு ஆளாகின்றனர். இதுதான் 10 ஆண்டு கால பா.ஜ.க. ஆட்சியின் சாதனை.

வாரணாசியில் ஆரம்பத்தில் வழுக்கி வழுக்கி விழுந்த பிரதமர் மோடி சிரமப்பட்டு தான் வெற்றியை தொட்டார். 50க்கும் மேற்பட்ட இடங்களில் 1000, 2000 வாக்குக ளில் தான் பா.ஜ.க. வெற்றி பெற்றுள்ளது.

சரத்பவார் சாதாரணமானவர் அல்ல! திராவிட சாணக் கியர்! காலம் காத்திருக்கிறது! சரியான நேரத்தை பார்த் திருக்கிறது. விரைவில் மீண்டும் நாடாளுமன்றத் தேர் தல் வரத்தான் போகிறது. இந்திய மக்கள் மகிழத்தான் போகிறார்கள். உதயசூரியன் விடியலைத் தரத்தான் போகிறது.



மயிலாடுதுறையில் புகைப்பட நிபுணர் கோவை சுப்பு ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா புகைப்படக் கண்காட்சியை பள்ளி, கல்லூரி மாணவ-மாணவியர் பார்வையிட்டனர்.

## ‘தொழிலாளர்களைத் தேடி மருத்துவம்’ புற்று நோய்க்கான சிறப்பு சிகிச்சை!

# அரசு மருத்துவமனைகளில் குழந்தையின்மைக்கான சிறப்பு சிகிச்சை!

## சட்டப்பேரவையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

**சென்னை, ஜூன் 23- சட்டப்பேரவையில் உறுப்பி னர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையில் அமைச்சர் மா. சுப்பிரமணியன், தொழி லாளர்களைத் தேடி மருத்து வம், குழந்தையின்மைக்கான சிறப்பு சிகிச்சை, புற்று நோய்க் கான சிறப்பு சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின் றன என்று குறிப்பிட்டார்.**

இது குறித்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் சட்டப்பேரவை யில் கேள்வி நேரத்தில் அளித்த பதில் வருமாறு:-

தொற்றா நோய்களுக் கான சேவைகள் வழங்குவ தில் உள்ள சவால்களை எதிர்கொள்ளும் நோக்கில் தொற்றா நோய்களுக்கான சேவைகளை பயனாளிக ளின் இல்லங்களுக்கே தேடிச் சென்று அளிக்கும் வகையில், தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் சீறிய திட்டங்களில் ஒன் றான “மக்களைத் தேடி மருத்துவம்“ என்கின்ற திட் டம் 05.08.2021 அன்று கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தொடங்கி வைக்கப் பட்டது.

மக்களைத் தேடி மருத்து வத் திட்டத்தின் களப் பணி யாளர்கள் இல்லங்களுக்கே சென்று தொற்றாநோய் பரி சோதனைகளை வழங்கும் நேரத்தில் தொழிற்சாலைக ளில் பணிபுரியும் பெரும்பா லான மக்கள் வேலைக்கு செல்வதால் அவர்கள் இச்சே வைகள் கிடைக்காமல் விடு படுகின்றனர் என்பது கண்ட றியப்பட்டது.

இந்தவகையில், முதல மைச்சர் அவர்கள் மாநிலத் தின் பொருளாதார வளர்ச் சிக்கு அடித்தளமாக விளங் கும் தொழிலாளர்களின் நல னில் தனி அக்கறை கொண்டு தொழிற்சாலைகளிலும் கட் டுமானம் உள்ளிட்ட அமைப்புசாரா தொழில்களி லும் ஈடுபட்டுள்ள தொழி லாளர்கள் தொற்றாநோய்க ளினால் பாதிக்கப்படுவதைத் தடுக்கும்பொருட்டு சிறப்பு முயற்சியாக தொழிலாளர்க ளைத் தேடி மருத்துவத் திட் டம் எனும் தொற்றா நோய் களுக்கான திட்டம் ஒன்றை 09.01.2024 அன்று திருவள் ளூரில் இருக்கின்ற Hyundai Mobis Plantல் தொடங்கி வைக்கப்பட்டது.

அந்தத் திட்டத்தில் இது வரை 711 தொழிற்சாலைக ளிலுள்ள 8.35 இலட்சம் தொழிலாளர்களுக்கு அந்த திட்டம் பயன்படுகின்றவ கையில், ஊரக நலப்பணி கள் இயக்ககம் மற்றும் தொழிலக பாதுகாப்பு மற் றும் சுகாதார இயக்ககம் (Directorate of Industrial Safety and Health) என்கிற அமைப் புகளோடு சேர்ந்து உயர் ரத்த அழுத்தம், நீரிழிவு நோய் போன்ற தொற்றா நோய்களுக்கான பரிசோ தனை முகாம்கள் அந்தந்த தொழிற்சாலைகளிலேயே நடத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தால் புலம் பெயர் தொழிலாளர்களும் பயனடைந்து வருகின்றார் கள் என்பதைத் தங்களின் மேலான கவனத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்திட்டத்தின் மூலம் 10.06.2024 வரை 476 தொழிற்சாலைகளில் 2,87,114 நபர்களுக்கு தொற்றா நோய்களுக்கான உயர் இரத்த அழுத்தம் மற் றும் நீரிழிவு நோய்களுக் கான பரிசோதனை செய்யப் பட்டதில் 25,075 பேர் புதிதாக தொற்றா நோய்க ளுக்கான சாத்தியக்கூறு உள் ளவர்கள் என கண்டறியப் பட்டுள்ளனர்.

மேலும், ஏற்கெனவே தொற்றாநோய் பாதிப்புள்ள வர்கள் 11,062 நபர்கள் என வும் தொற்றா நோய்களான உயர் இரத்த அழுத்தம், நீரி ழிவு நோய் பாதிப்பு இல்லா தவர்கள் 2,50,977 எனவும் கண்டறியப்பட்டிருக்கிறது.

அந்த வகையில் அம்பத் தூர் தொகுதியில் சட்ட மன்ற உறுப்பினர் கோரியி ருப்பதைப் போல சென்னை மாநகராட்சியிலுள்ள அம் பத்தூர் தொழிற்பேட்டைப் பகுதியில் 500க்கும் மேற் பட்ட பெரிய தொழிற்சா லைகளும், சிறிய தொழிற்சா லைகளும் இருக்கிறது.



அதோடுமட்டுமல்ல, இன் றைக்கு கிண்டி, திருமுடி வாக்கம் போன்ற பல்வேறு பகுதிகளிலும் குறு, சிறு தொழில்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அங் கேயெல்லாம் இத்திட் டத்தை விரிவாக்கம் செய்து அவர்களுக்கும் இந்தப் பரி சோதனைகளை மேற் கொள்ள முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கி றார்கள். அந்தப் பணியும் விரைவில் நடைபெறவிருக் கிறது.

### குழந்தையின்மைக்கான சிகிச்சை

தமிழ்நாட்டில் இருக்கிற வட்டார பொது மருத்துவம னைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மாவட்ட அரசு தலைமை மருத்துவம னைகள் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக ளில் மகப்பேறுவிற்காக வருகிற தாய்மார்களுக்கு Counselling திட்டம் ஏற்க னவே நடைமுறையில் இருக்கிறது. இருந்தாலும் உறுப்பினர் சொல்லியிருப் பது போல அதில் சிறப்பு கவனம் செலுத்தி, இன்ன மும் அதை கூடுதலாக்கும் முயற்சியை துறை மேற் கொள்ளும் என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

### மொடக்குறிச்சி தொகுதி ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்துதல்

மொடக்குறிச்சித் தொகு தியில் இருக்கின்ற மேம்ப டுத்தப்பட்ட அரசு மருத்து வமனை 15வது நிதி ஆணை யத்தின் ஆதாரம் கொண்டு, பணிகள் தொடங்குவதற்கு ரிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டிருக்கிறுது. விரைவில் அந்தப் பணிகள் தொடங்கப்படும்.

புற்றுநோயைப் பொறுத் தவரையில், இன்றைக்கு உல கத்தை அச்சுறுத்திக்கொண் டிருக்கிற நோய்களில் ஒன்றாகவே இருந்துக் கொண்டிருக்கிறது. அந்தவ கையில்தான் முதலமைச்சர் அவர்கள், இந்த அரசு பொறுப்பேற்பதற்கு முன் னாள் வரை தமிழகத்தில் இருந்து புற்றுநோய் ஆராய்ச்சி கருவி PETCT Scan கருவி இரண்டு இடங்களில் மட்டுமே இருந்தது, இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு இரண்டு இடங்களில் மட்டுமே இருந்த PETCT Scan கருவி நாகர்கோவில், தஞ்சாவூர், சேலம், கோவை, காஞ்சிபுரம், இப்போது 7 இடங்களில் வைக்கப்பட்டி ருக்கிறது.

அதோடுமட்டுமல்ல முத லமைச்சர் அவர்களிடத்தில் ஒரு கோரிக்கை வைக்கப் பட்டது. நான்கு, ஐந்து குறிப்பிட்ட மாவட்டங்க ளில் புற்றுநோய்க்கான அறி குறிகள் அதிகரித்து வருகிற நிலையில் அவர்களுக்கு முழுமையாக பரிசோதனை அந்த மக்களுக்கு செய்து, தொடக்க நிலையிலேயே புற்றுநோயை கண்டறியும் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டது.

அந்த வகையில் முதல மைச்சர் அவர்களின் வழி காட்டுதலின்படி, ஈரோட் டில் அந்தத் திட்டம் தொடங்கிவைக்கப்பட்டு, ஈரோடு, கன்னியாகுமரி, திருப்பத்தூர், ராணிப் பேட்டை ஆகிய நான்கு மாவட்டங்களில் இருக்கிற மக்களுக்கு முழுமையாக புற்றுநோய் குறித்த பரிசோ தனைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்தத் திட்டத்தை மேலும் தமிழ்நாடு முழுவதி லும் விரைவுப்படுத்துவ தற் கான அந்தச் செயல், இந்த அரசிடம் இருக்கிறது என்ப தைத் தெரிவித்துக் கொள்கி றேன்.

இவ்வாறு பேரவையில் அமைச்சர் மா.சுப்பிரமணி யன் பதிலளித்தார்.

## இலங்கை – இந்திய

# கப்பல் சேவையை விரைவில் ஆரம்பிக்க வேண்டும்!

## மணவை அசோகன் வேண்டுகோள்

கொழும்பு, ஜூன் 23- “இலங்கை, இந்திய கப்பல் சேவையை விரை வில் ஆரம்பிக்க வேண்டும்” என்று இலங்கை, இந்திய தொடர்பாளர் மணவை அசோகன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தென்னிந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் விரைவில் கப்பல் பயணி கள் போக்குவரத்து தொடங்கவுள்ளதாக பத்தி ரிகை செய் திகள் தான் வந்த வண்ணம் உள்ளன.

இரு நாட்டு அரசும் அதற்கு செயல்வடிவம் கொடுப்பதாக தெரிய வில்லை.

விரைவில் கப்பல் போக்கு வரத்து தொடங்கி இரு நாட்டு மக்களையும் மகிழ்ச் சியடையச் செய்ய வேண் டும். வசதி படைத்தோர் இரு நாட்டு விமானங்களில் பயணித்து தனக்குண்டான காரியங்களைச் செய்து முடிக்கின்றனர்.

வசதியற்றோர் இலங்கை யையும் இந்தியாவையும் கனவில் தான் காண்கிறார் கள். இரு நாட்டில் வசிக்கும் உறவினர்கள் பல தலை முறைகளாக சந்திக்காமல் உள்ளனர். அவர்களை இணைக்க வேண்டும். இரு நாட்டு புன் னி ய ஸ் த லங் களையும் மக்கள் காண வேண்டும்.

அதற்கு இலங்கை தலை வர்களும் இந்திய தலைவர் களும் இணங்க வேண்டும். இலங்கை இந்திய இரு நாட்டு மக்களும் மகிழ்ச் சியுற இருநாட்டு அரசும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு இலங்கை, இந் திய தொடர் பாளர் மணவை அசோகன் கேட் டுக் கொண்டுள்ளார்.

## ஏழை மக்களின் வாழ்க்கை உயர அனைத்து விதமான திட்டங்களையும் அமைத்து தந்த

# முத்தமிழறிஞர் கலைஞருக்கு நன்றி கூற வார்த்தைகள் இல்லை!

## மயிலாடுதுறையில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு புகைப்படக் கண்காட்சியைப் பார்த்த மாணவி நெகிழ்ச்சி!

மயிலாடுதுறை, ஜூன் 23- ஏழை மக்களின் வாழ்க்கைக்குத் தேவை யான அனைத்து விதமான திட்டங்களையும் அமைத் துக் கொடுத்த முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்களுக்கு நன்றி கூற வார்த்தைகள் இலலை என மயிலாடுதுறை யில் புகைப்பட நிபுணர் கோவை சுப்பு ஏற்பாட்டில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா புகைப்படக் கண்காட்சியை பார்வையிட்ட மாணவி சுகப்பிரியா நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

புகைப்படக் கண் காட்சியை பார்த்த பின் அம்மாணவி தெரிவித்துள்ள கருத்து வருமாறு:-

தமிழக முதல்வர் அவர்க ளின் வழிகாட்டு தலின்படி கலைஞர் நூற்றாண்டு விழாவை நினைவூட்டும் வழியாக புகைப்படக் கண் காட்சி மிகவும் அருமையா கவும், அவர்களின் பெருமை களையும் அழகுற வெளிப் படுத்துமாறு அழகுற அமைத்துள்ளனர். முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தனது மக்கள் மீது கொண்ட பற்றை தெளிவுற காண முடிகிறது.

ஏழை மக்களுக்கு அவர்க ளது வாழ்க்கைக்கு தேவை களையும், அவர்களுக்கு வாழ்க்கை செழிப்பாக அமையவும் அனைத்து விதமான தேவைகளையும், திட்டங்களையும் அமைத்து தந்த அவர்களுக்கு நன்றி கூற வார்த்தைகள் இல்லை. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திட்டங்கள் ஆனது மக்களுக்கு மட்டு மல்லாது மாணவர்களுக்கு சிறப்புற அமைந்துள்ளது. இளைஞர் களது வாழ்க்கையை ஏற்படுத்தி அவர்களுக்கான வேலையும் அவர்களது திறமைகளையும் வெளிப்ப டுத்தும் விதமாக அமைகிறது. கலைஞர் அவர்களது திட் டத்தை படைத்ததில் எனக்கு மிகவும் ஈர்ப்பு கொண்ட திட்டம் குக்கிரா மங்களுக்கு 1998-ல் பின் பஸ் வசதி அமைத்து கொடுத் தது. ஏனெனில் அவசர உதவி களுக்கு கூட போக்குவரத்து இல்லாமல் இந்த மக்களுக்கு மிகவும் தேவையான ஒன்றாக திகழ்ந்தது. இத்த கைய திட்டங்களை நமக்கு அளித்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு நன்றி கூறி வணங்குகிறேன். இத்தகைய சிறந்த சாதனைகள் அனைத்தை யும் புகைப்படமாக பார்க்க வழி காட்டிய தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி!

கோவை சுப்பு ஏற்படுத்திய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகைப்படக் கண்காட்சி நன்றாக இருந்தது.

இவ்வாறு அவர் தெரி வித்துள்ளார்.

## தி.மு.க. மாணவர் அணி சார்பில்

## சென்னை வள்ளுவர் கோட்டத்தில், ஜூன் 24 அன்று நடைபெறுவதாக இருந்த

# கண்டன ஆர்ப்பாட்டம் ஒத்திவைப்பு!

### தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ., அறிவிப்பு!

நீட் தேர்வே தமிழ்நாட்டிற்கு தேவையில்லை என்பதற்காக நிறைவேற்றி அனுப்பியிருக்கும் சட்ட மசோதாவிற்கு உடனடியாக ஒப்புதல் தர வேண்டு மென்றும் - நீட் தேர்வில் நடைபெற்றுள்ள மிகப்பெரிய மோசடிகளை, குளறுபடிகளை களைவதற்கு மேல் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும், ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசை கண்டித்து தி.மு.க மாணவர் அணிச் சார்பில் வருகிற 24.06.2024 அன்று சென்னை, வள்ளுவர் கோட்டம் அருகில் நடைபெற இருந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் ஒத்தி வைக்கப்படுகிறது. ஆர்ப்பாட்டம் நடைபெறும் தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 19.06.2024

**சி.வி.எம்.பி. எழிலரசன்**, எம்.எல்.ஏ.
செயலாளர்,
தி.மு.க. மாணவர் அணி

# படுபாதாளத்தில் இருந்த புவியியல் – சுரங்கத் துறையின் வருவாய் ரூ. 1,835 கோடியாக உயர்ந்திருக்கிறது...!

## சட்டப் பேரவையில் மானியக் கோரிக்கைக்கு அமைச்சர் துரைமுருகன் பதிலுரை... முதல் பக்கத் தொடர்ச்சி

அத்திக்கடவு-அவிநாசி திட்டம், இந்தத் திட்டம் 2018-ல் 1,652 கோடி ரூபாயில் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், இதுவரையில் இன்றைக்கு திருத்திய மதிப்பீடு, செலவுகள் எல்லாம் செய்து 1,756 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. சோதனை ஓட்டம் முடிந்திருக்கிறது. இப்போது தண்ணீர் கொண்டு செல்லலாம். ஆனால் காளிங்கராயன், பவானி ஆற்றில் தண்ணீர் இல்லை. ஆகையால் தண்ணீர் வந்தவுடன் அத்திக்கடவு இந்த ஆண்டு துவக்கத்திற்கு வந்துவிடும்.

அதேபோல், தாமிரபரணி-கருமேனியாறு-நம்பியாறு இணைப்பு திட்டம். இந்தத் திட்டம் ஏ அப்பா! 2009 ஆம் ஆண்டில் கலைஞர் துவக்கினார். அதற்கு அப்புறம் அப்படியே நின்று போய்விட்டது. தாமிரபரணி-கருமேனியாறுக்கும் 75 கிலோ மீட்டர் நீளமுள்ள ஒரு கால்வாய் அமைக்கும் பணி கொஞ்சம் கொஞ்சமாக பணம் இல்லாமல் போய் இடையிலே நின்று போய், மறுபடியும் நாங்கள் வந்து, பணம் கொடுத்து இதுவரையில் 1,023 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. இதுவரையில் 95 சதவிகித பணிகள் நிறைவு பெற்றிருக்கின்றன. செப்டம்பர் 2024-க்குள் பணிகள் முடிக்கப்படும்.

**பேரவைத் தலைவர்:** சோதனை ஓட்டம் ஓட்டியாகி விட்டது. எங்கள் திட்டமல்லவா அது.

**அமைச்சர் துரைமுருகன்:** அடுத்து, சரபங்கா திட்டம். இந்தத் திட்டம் 565 கோடி ரூபாயில் துவக்கப்பட்டது. இன்றைக்கு 618 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. பணிகள் முடிவடைந்துவிட்டன. இதுவும் தயாராக இருக்கிறது.

அடுத்து, கடைமடை நீரொழுங்கி-TAIL END REGULATOR. தஞ்சை மாவட்டத்தில் இது மிகப்பெரிய பிரச்சினை. காவிரி உபவடி நிலத்தில் 21 ஆறுகள் மற்றும் 410 வடிகால்கள் உள்ளன. வெண்ணாற்று உபவடி நிலத்தில் 16 ஆறுகள், 294 வடிகால்கள் உள்ளன. அவற்றில், 36 இடங்களில் கடல்நீர் புகுந்து நிலத்தடிநீர் உவர் நீராக மாறுவதற்கு காரணமாக இருந்து, குடிநீர் மாசு அடைந்துவிட்டது. இதில் 16 இடங்களில் கடைமடை நீரொழுங்கி கட்டப்பட்டு, கடல்நீர் உள்புகுவது தடுக்கப்பட்டிருக்கிறது. 4 இடங்களில் இந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன; 8 இடங்களில் அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது; 8 இடங்களில் ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கடல்நீர் உள்ளே புகாமல் தடுக்கப்படும்.

அடுத்து, கல்லணை காய்வாய்த் திட்டம். இந்தத் திட்டத்தில் அதனுடைய கிளை வாய்க்கால்களை செப்பனிடுவதற்காக 1,232 கிலோ மீட்டர் தூரத்திற்கு 2,639 கோடி ரூபாயில் ஆரம்பிக்கப்பட்டது. இன்றைக்கு அந்தத் திட்டம் மாறிக்கொண்டு வந்திருக்கிறது. ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுதான். இதைப் பொறுத்தவரையிலே வேகமாக பணிகள் நடைபெற்று வருவதை நான் தெரிவித்துள்ளேன்.

அதேபோன்று, MINES DEPARTMENT. MINES DEPARTMENT-ல் மூன்று இருக்கின்றன. அதாவது, புவியியல் மற்றும் சுரங்கத் துறை, TAMIN, TANMAG உள்ளன. இந்த மூன்றின் நிலைமை என்னவென்றால், இந்த மூன்று இலாக்காக்களும் மிக படு பாதாளத்தில் இருந்தது. கடந்த மூன்று வருடங்களில் இவற்றை நான் எங்கே கொண்டு வந்திருக்கிறேன் என்று கேட்டால், புவியியல் மற்றும் சுரங்கத் துறையில் 1,679 கோடி ரூபாயாக இருந்த வருவாய் இந்த ஆண்டு 1,835 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது.

TAMIN நிறுவனத்தில் சென்ற ஆண்டு 92 கோடி ரூபாயாக இருந்த வருவாய், இந்த ஆண்டு 110 கோடியாக உயர்ந்திருக்கிறது. TAMIN நீண்ட நாள் நட்டத்தில் இயங்கி வந்தது. இப்போது மீட்டெடுத்திருக்கிறோம். TANMAG நிறுவனத்தில் சென்ற ஆண்டு 66 கோடி ரூபாயாக இருந்த வருவாய், இந்த ஆண்டு 94.5 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது.

GRANITE QUARRY கழிவுகளை எல்லாம் இன்றைக்குடன் ஒன்றிற்கு 100 ரூபாய் உரிமைக் கட்டணம் செலுத்த வேண்டுமென்று வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இனிமேல் E-AUCTION விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

சட்டவிரோதமாக கனிமங்கள் கடத்தப்படுவதைத் தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது.

மூன்றாவதாக, கேரளாவிற்கு கனிமங்களை எடுத்துச்செல்வது. உயர் நீதிமன்ற தீர்ப்பின்படி உரிய நடைசீட்டு பெற்று, அண்டை மாநிலங்களுக்கு கனிமம் எடுத்துச்செல்ல தடை ஏதுமில்லை. இருப்பினும், அண்டை மாநில ஏற்றுமதியை கட்டுப்படுத்தும்பொருட்டு, அண்டை மாநிலங்களுக்கு கொண்டு செல்லப்படும் கனிமங்களுக்கு உரிய உரிமத் தொகையில் (SEIGNIORAGE FEE) 50 சதவிகிதம் பசுமை நிதியாக வசூலிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் இருக்கின்ற கல்குவாரி CRUSHER, LORRY சங்கத்தினர் விடுத்த கோரிக்கைகளையெல்லாம் பரிசீலனை செய்ய அலாவுதீன், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) ஆகாது, ஆகாது.

இலவசமாக வண்டல் மண் எடுத்தல். நீர்வளத் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் பராமரிப்பில் உள்ள கண்மாய்கள், குளங்கள், ஏரிகள், நீர்த்தேக்கங்கள் கால்வாய்களிலிருந்து கட்டணம் இல்லாமல் விவசாய பயன்பாட்டிற்கும், மண்பானை தொழில் செய்வதற்கும் மண், வண்டல் மண், களிமண் ஆகியவற்றை இலவசமாக எளிய முறையில் எடுத்துச்செல்லலாம்.

மதுரையில் உள்ள கிரானைட் குவாரி தொடர்பாக ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

### அறிவிப்புகள்: நீர்வளத் துறை

1. முக்கிய ஆறுகளில் வெள்ளக் காலங்களில் கிடைக்கும் நீரை சேமித்து, நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தவும், வெள்ளநீரின் தீவிரத்தை கட்டுப்படுத்தவும், 7 மாவட்டங்களில், 10 இடங்களில் தடுப்பணைகள் அமைக்கும் பணி ரூபாய் 71 கோடியே 86 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டம், மணவாளநல்லூர் கிராமம் அருகில், மணிமுக்தா ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 25 கோடியே 20 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், சின்னமசமுத்திரம் கிராமத்தில், புல எண். 121-ல் வசிஷ்டா நதியின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 5 கோடியே 48 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், கண்ணுக்குடி கிழக்கு கிராமத்தில், பாட்டுவனாட்சி வடிகாலின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 2 கோடியே 20 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், கரம்பயம் கிராமத்தில், வேதபுரி ஆற்றின் குறுக்கே நெடுகை 38 கி.மீ -ல் தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 6 கோடி மதிப்பீட்டிலும்,

திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் வட்டம், பெரியங்குப்பம் கிராமத்தில் வெள்ளக்கல் கானாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 4 கோடி மதிப்பீட்டிலும்,

திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் வட்டம், கதவாளம் கிராமத்தில் மலைக்கானாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 6 கோடி மதிப்பீட்டிலும்,

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், வீரணம்பாளையம் கிராமத்தில், புல எண். 1163-ல் காட்டுநாயக்கன்பாளையத்தின் அருகே வட்டமலைக்கரை ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 3 கோடியே 91 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், நவனாரி கிராமத்தில், புல எண். 323-ல் உப்பாறு ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 7 கோடியே 57 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு வட்டம், ரெட்டியார்பாளையம் கிராமத்தின் அருகே பாம்பனாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 5 கோடி மதிப்பீட்டிலும்,

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மருங்காபுரி வட்டம், தெத்தூர் கிராமத்தில், புல எண். 152 -ல் பாலாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 6 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

2. 7 மாவட்டங்களில், 10 இடங்களில் அணைக்கட்டுகள் மற்றும் பகிரணைகள் அமைக்கும் பணி ரூபாய் 55 கோடியே 36 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், செம்பூண்டி கிராமத்தில் செல்லும் செம்பூண்டி மடுவின் குறுக்கே அணைக்கட்டு கட்டி செம்பூண்டி ஏரிக்கு தண்ணீர் கொண்டு செல்லும் பணி ரூபாய் 4 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி வட்டம், அழகன்வயல் கிராமத்தில் நரசிங்க காவேரி ஆற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைத்து, ஒச்சக்குடி ஏரிக்கு பாசன வசதியளிக்கும் பணி ரூபாய் 4 கோடியே 80 இலட்சம் மதிப்பீட்டிலும்,

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், ப. கொடிக்குளம் கிராமத்தில், கொடிக்குளம் கண்மாய் உபரிநீர் கால்வாயின் குறுக்கே, பகிரணை அமைத்து அகரம் கண்மாய்க்கு பாசன வசதியளிக்கும் பணி ரூபாய் 4 கோடியே 19 இலட்சம் மதிப்பீட்டிலும்,

## ரூ. 55.36 கோடியில் - 10 இடங்களில் அணைக்கட்டுகள் - பகிரணைகள்! 10 இடங்களில் ரூ. 71.86 கோடியில் தடுப்பணைகள்!

இராமநாதபுரம் மாவட்டம், கமுதி வட்டம், அச்சன்குளம் கிராமத்தில், அபிராமம் கண்மாய் வழங்கு கால்வாயின் குறுக்கே பகிரணை அமைத்து அச்சன்குளம் கண்மாய்க்கு பாசன வசதியளிக்கும் பணி ரூபாய் 2 கோடியே 18 இலட்சம் மதிப்பீட்டிலும்,

இராணிப்பேட்டை மாவட்டம், கலவை வட்டம், வாழப்பந்தல் கிராமம் அருகே கமண்டல நாகநதியின் குறுக்கே அணைக்கட்டு அமைக்கும் பணி ரூபாய் 14 கோடியே 98 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தென்காசி மாவட்டம், சிவகிரி வட்டம், ராயகிரி கிராமத்தில் உள்ள நேரடி பாசன நிலங்களுக்கு பாசன வசதியளிக்க, விஜயரெங்கபேரிகல் அணைக்கட்டின் கீழ்புறத்தில், தொட்டிச்சிமலையாற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைக்கும் பணி ரூபாய் 3 கோடியே 70 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தென்காசி மாவட்டம், சிவகிரி வட்டம், தென்மலை கிராமத்தில், ஈச்சன் ஓடையின் குறுக்கே, அணைக்கட்டு அமைத்து எட்டிசேரி குளத்திற்கு பாசன வசதியளிக்கும் பணி ரூபாய் 2 கோடியே 86 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தென்காசி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், மேலப்புளியங்குடி கிராமத்தில், வாழமலையாற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைத்து பெரிய பஞ்சமன்னார் குளத்திற்கு பாசன வசதியளிக்கும் பணி ரூபாய் 3 கோடி மதிப்பீட்டிலும்,

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், துவரமடை கிராமத்தில், நரியாற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைத்து பைங்காட்டுவயல் ஏரிக்கு பாசன வசதியளிக்கும் பணி ரூபாய் 5 கோடியே 88 இலட்சம் மதிப்பீட்டிலும்,

விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டம், கீழ்செம்பூர் கிராமத்தில், கிருதுமால் ஆற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைத்து, இராமநாதபுரம் மாவட்டம், கமுதி வட்டம், T.புனவாசல் கிராமத்தில் உள்ள T.புனவாசல் கண்மாய்க்கு பாசன வசதியளிக்கும் பணி ரூபாய் 9 கோடியே 27 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

3. கடலூர் மற்றும் மயிலாடுதுறை, திருவண்ணாமலை, திருவாரூர் மாவட்டங்களில், 3 இடங்களில், தரைகீழ் தடுப்பணைகள் அமைக்கும் பணி ரூபாய் 103 கோடியே 23 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டம், மாதர் சூடாமணி (மா. புளியங்குடி) கிராமம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், சித்தமல்லி கிராமங்களுக்கு இடையே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே தரைகீழ் தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 93 கோடி மதிப்பீட்டிலும்,

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம், தொழுப்பேடு கிராமத்தின் அருகே செய்யாற்றின் குறுக்கே தரைகீழ் தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 5 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், அடம்பர் கிராமத்தில், திருமலைராஜன் ஆற்றின் குறுக்கே, மைல் 72/7 -ல் தளமட்ட சுவருடன் கூடிய தரைகீழ் தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 4 கோடியே 73 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

4. சிவகங்கை மாவட்டத்தில், முன்னாள் ஜமீன் கண்மாய்களான 7 குறு பாசன கண்மாய்களைப் புனரமைக்கும் பணி ரூபாய் 4 கோடியே 97 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், கல்லல் வட்டாரம், கீழபூங்குடி கிராமம், புளிய முன்னாள் ஜமீன் கண்மாயினைத் தரப்படுத்தும் பணி ரூபாய் 65 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டம், கண்ணங்குடி வட்டாரம், களத்தூர் கிராமம், பகையணிவயல் முன்னாள் ஜமீன் கண்மாயினைத் தரப்படுத்தும் பணி ரூபாய் 51 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், திருப்பத்தூர் வட்டாரம், கருப்பூர் கிராமம், கிருஷ்ணன் முன்னாள் ஜமீன் கண்மாயினைத் தரப்படுத்தும் பணி ரூபாய் 72 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சிவகங்கை மாவட்டம், இளையாங்குடி வட்டம், இளையாங்குடி வட்டாரம், முள்ளியரேந்தல் கிராமம், பட்டாதட்டி முன்னாள் ஜமீன் கண்மாயினைத் தரப்படுத்தும் பணி ரூபாய் 75 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சிவகங்கை மாவட்டம், இளையாங்குடி வட்டம், இளையாங்குடி வட்டாரம், முள்ளியரேந்தல் கிராமம், பாப்பனேந்தல் முன்னாள் ஜமீன் கண்மாயினைத் தரப்படுத்தும் பணி ரூபாய் 91 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், சாக்கோட்டை வட்டாரம், பள்ளத்தூர் கிராமம், நரியன் முன்னாள் ஜமீன் கண்மாயினைத் தரப்படுத்தும் பணி ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டம், தேவகோட்டை வட்டாரம், திருமணவயல் கிராமம், தென்னம்புவயல் முன்னாள் ஜமீன் கண்மாயினைத் தரப்படுத்தும் பணி ரூபாய் 83 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

5. பாரம்பரிய நீர்பாசன கட்டுமானங்களான, ஈரோடு மாவட்டத்தில் உள்ள காலிங்கராயன் அணைக்கட்டு மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பழவூர் அணைக்கட்டுகளைப் புனரமைப்பு செய்யும் பணி ரூபாய் 3 கோடியே 7 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டத்தில் உள்ள உலகப் பாரம்பரியச் சின்னமான காலிங்கராயன் அணைக்கட்டினை மறுசீரமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 57 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி வட்டம், தாமிரபரணி ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள பழவூர் அணைக்கட்டினைப் புதுப்பித்து பாரம்பரிய நினைவுச் சின்னம் அமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

6. பாசன நிலங்களுக்கு நீர் வழங்குவதை உறுதி செய்யவும், நீர் வீணாவதை தடுக்கவும், நான்கு மண்டலங்களிலுள்ள 11 மாவட்டங்களில் உள்ள பழுதடைந்துள்ள 24 அணைக்கட்டு மற்றும் தடுப்பணைகளில் உள்ள புனரமைப்பு, மறுசீரமைப்பு மற்றும் மறு கட்டுமானப் பணிகள் ரூபாய் 284 கோடி 70 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், எஸ். மலையனூர் அணைகட்டு மற்றும் அதன் தொடர் கண்மாய்களை புனரமைத்து மேம்படுத்தும் பணி ரூபாய் 8 கோடி மதிப்பீட்டிலும்,

இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா மற்றும் ஆற்காடு வட்டங்களில் உள்ள திருமலைச்சேரி மற்றும் புதுபாடி கிராமங்களின் அருகே உள்ள பாலாறு அணைக்கட்டினை புனரமைக்கும் பணி ரூபாய் 200 கோடியே 66 இலட்சம் மதிப்பீட்டிலும்,

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், அரிமளம் கிராமத்தில் உள்ள கூடலூர் அணைக்கட்டின் வலது புற தலைமதகினை பழுதுபார்த்தல் மற்றும் பாதுகாப்பு சுவரினைப் புதுப்பிக்கும் பணி ரூபாய் 1 கோடியே 55 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், வத்தலக்குண்டு கிராமம், மஞ்சளாற்றின் குறுக்கே அமைத்துள்ள குன்னுவராயன்கோட்டை அணைக்கட்டினைப் புனரமைக்கும் பணி ரூபாய் 2 கோடியே 21 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் வட்டம், தண்டரை அணைக்கட்டினைப் புனரமைத்து மேம்படுத்தும் பணி ரூபாய் 4 கோடியே 40 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், மேமாளூர் அணைகட்டு மற்றும் அதன் தொடர் கண்மாய்களை புனரமைத்து மேம்படுத்தும் பணி ரூபாய் 8 கோடி மதிப்பீட்டிலும்,

திருவண்ணாமலை மாவட்டம், கலசபாக்கம் வட்டம், எலத்தூர் கிராமம், செய்யாற்றின் குறுக்கே அமைந்துள்ள மேல்செய்யாறு அணைக்கட்டினை மறுகட்டுமானம் செய்யும் பணி ரூபாய் 18 கோடியே 40 இலட்சம் மதிப்பீட்டிலும்,

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், சுவேதா உபவடிநிலத்தில் கல்லாறு ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள மாமரத்து இராவுத்தர் அணைக்கட்டு, நல்லபிள்ளைகொண்டம் அணைக்கட்டு, தொண்டமாந்துறை அணைக்கட்டு மற்றும் தென்னாந்தோப்பு அணைக்கட்டுகளைப் புதுப்பிக்கும் பணி 4 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், பாலகிருஷ்ணாம்பட்டி கிராமம், அய்யாற்றின் குறுக்கே அமைந்துள்ள பாலகிருஷ்ணாம்பட்டி அணைக்கட்டு மற்றும் வழங்கு வாய்க்கால் வெளிப்போக்கி ஆகியவற்றினைப் புனரமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 5 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவண்ணாமலை மாவட்டம் மற்றும் வட்டத்தில் உள்ள சம்மந்தனூர், பள்ளிக்கொண்டப்பட்டு மற்றும் சின்னகாங்கேயனூர் அணைக்கட்டுகள் மற்றும் அதன் வழங்கு கால்வாய்களைப் புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் பணி ரூபாய் 1 கோடியே 90 இலட்சம் மதிப்பீட்டிலும்,

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், அரும்பாவூர் கிராமம், பள்ளர்கொண்டம் அணைக்கட்டு, அதன் பாசன வாய்க்கால் மற்றும் பள்ளர்கொண்டம் ஓடையினை சீரமைக்கும் பணி ரூபாய் 1 கோடி மதிப்பீட்டிலும்,

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், கடையக்குடி கிராமம், ஹோல்ட்ஸ்வொர்த் அணைக்கட்டு மற்றும் அதன் திருகு பலகைகளைப் புதுப்பிக்கும் பணி ரூபாய் 2 கோடியே 60 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், உளுந்தை கிராமம், உளுந்தை அணைக்கட்டினைப் புனரமைக்கும் பணி ரூபாய் 5 கோடியே 65 இலட்சம் மதிப்பீட்டிலும்,

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், புதுவாக்கோட்டை கிராமம், புதுவாக்கோட்டை அணைக்கட்டினைப் புனரமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், சுருளிபட்டி கிராமத்தில் உள்ள உத்தமுத்து அணைக்கட்டினைப் புனரமைத்தல் மற்றும் சுருளிபட்டி, உத்தமபுரம் மற்றும் உத்தமபாளையம் தெற்கு கிராமங்களிலுள்ள உத்தமுத்து அணைக்கட்டின் வழங்கு வாய்க்காலினைப் புனரமைக்கும் பணி ரூபாய் 11 கோடியே 3 இலட்சம் மதிப்பீட்டிலும்,

புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி வட்டம், பெருமருதூர் கிராமம், மணலூர் அணைக்கட்டினைப் புனரமைக்கும் பணி ரூபாய் 1 கோடி மதிப்பீட்டிலும்,

விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டம், பூம்பிடாகை கிராமம், ஓடத்தூர் அணைக்கட்டின் கீழ்ப்புற வீழ்நீர் தாங்குதளம் (DOWNSTREAM APRON) பழுது பார்க்கும் பணி மற்றும் பாதுகாப்பு சுவரினை மறுகட்டுமானம் செய்யும் பணி ரூபாய் 53 இலட்சம் மதிப்பீட்டிலும்,

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், பொட்டகவயல் வருவாய் கிராமம், நாயார் அணைக்கட்டினைப் புனரமைக்கும் பணி ரூபாய் 2 கோடியே 21 இலட்சம் மதிப்பீட்டிலும்

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் கிழக்கு வட்டம், தாமரைப்பாடி கிராமம், கல்லாறு ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள பாய் அணைக்கட்டினை சீரமைக்கும் பணி ரூபாய் 2 கோடியே 89 இலட்சம் மதிப்பீட்டிலும்,

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், கும்மங்குடி கிராமம், கும்மங்குடி அணைக்கட்டினைப் புனரமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 25 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், வீரமச்சான்பட்டி கிராமம், வீரமச்சான்பட்டி கீழணை மற்றும் கண்ணனூர் கிராமம், தீர்த்தநாயக்கன் அணைக்கட்டுகளைப் புனரமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 79 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கடலூர் மாவட்டம், கடலூர் வட்டம், வெள்ளக்கரை தடுப்பணை மற்றும் வெள்ளவாரி ஓடையினை புனரமைத்து மேம்படுத்தும் பணி ரூபாய் 1 கோடியே 26 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் வட்டம், நவல்பட்டு கிராமம், கும்பக்குடி தடுப்பணையின் கீழ்ப்புறத்தில் காட்டாறு ஆற்றினை மறுசீரமைக்கும் பணி ரூபாய் 32 இலட்சம் மதிப்பீட்டிலும்,

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி வட்டம், மாணியவயல் கிராமம், அக்னியாற்றின் குறுக்கே அமைந்துள்ள மாணியவயல் அணைக்கட்டினைப் புனரமைக்கும் பணி ரூபாய் 1 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

7. பாசன நிலங்களுக்கு நீர் வழங்குவதை உறுதி செய்யவும், நீர் வீணாவதை தடுக்கவும், நான்கு மண்டலங்களிலுள்ள 13 மாவட்டங்களில் பழுதடைந்துள்ள 25 கால்வாய்கள், வழங்கு வாய்க்கால்கள் மற்றும் வடிகால்கள் போன்ற பாசன அமைப்புகளில் புனரமைப்பு, மறுசீரமைப்பு மற்றும் மறு கட்டுமானம் செய்யும் பணிகள் ரூபாய் 116 கோடியே 52 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், தம்பிக்கோட்டை வடகாடு கிராமம், பழைய பாட்டுவாநாச்சி வடிகாலின் நெடுகை 3.500 கி.மீ-ல் உள்ள புலிகுத்திவாரி மிகைநீர் வழிந்தோடியினை மறு கட்டுமானம் செய்யும் பணி ரூபாய் 8 கோடியே 40 இலட்சம் மதிப்பீட்டிலும்,

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் வட்டப் பகுதியில் செல்லும் பெருங்குடி கால்வாயின் நெடுகை 0 மீட்டர் முதல் 5150 மீட்டர் வரை (விளாச்சேரி நீரொழுங்கி முதல் பெருங்குடி நீரொழுங்கி வரை) புதுப்பிக்கும் பணி ரூபாய் 6 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டம், சாயல்குடி கிராமம், சங்கரத்தேவன் கால்வாயினைப் புனரமைக்கும் பணி ரூபாய் 95 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், கீழக்குறிச்சி, பெரியக்கோட்டை மற்றும் புளியக்குடி கிராமங்கள், கண்ணனார் வடிகாலின் வலது கரையில் நெடுகை 31.00 கி.மீ முதல் 33.00 கி.மீ வரை ஈப்பு பாதையினை சீரமைத்தல் மற்றும் வடிகால் முகப்புகளைப் புனரமைக்கும் பணி ரூபாய் 9 கோடி மதிப்பீட்டிலும்,

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம் மற்றும் நகரத்தில் உள்ள கல்லார் மற்றும் சின்ன பாலாற்றை புனரமைக்கும் பணி ரூபாய் 9 கோடி மதிப்பீட்டிலும்,

மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம், எழுமலை கிராமம், எழுமலை கண்மாயின் உபரி நீர் கால்வாயினைப் புனரமைத்து, பாதுகாப்பு சுவர் அமைக்கும் பணி ரூபாய் 3 கோடியே 6 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், பழைய ஆழியார் அமைப்பின் கீழ் உள்ள பள்ளிவிளங்கால் வழங்கு வாய்க்காலினைப் புனரமைக்கும் பணி ரூபாய் 3 கோடி மதிப்பீட்டிலும்,

வேலூர் மாவட்டம், காட்பாடி மற்றும் கே.வி.குப்பம் வட்டத்தில் உள்ள மோர்தானா அணையின் இடது புற கால்வாய் தொலைக்கல் 0 மீ முதல் 31840 மீ வரை தூர்வாரி புனரமைக்கும் பணி ரூபாய் 2 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், மானூர் வரத்து வாய்க்கால், கோரிக்கடவு வரத்து வாய்க்கால் மற்றும் கீரனூர் வரத்து வாய்க்கால்களைப் புனரமைக்கும் பணி ரூபாய் 5 கோடியே 25 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி வட்டம், ஏனாதிக்கரம்பை, அம்மையாண்டி, செங்கமங்கலம், ஆதனூர் மற்றும் கழனிவாசல் கிராமங்களில் உள்ள, கழனிவாசல் வாய்க்காலில் நெடுகை 0.00 கி.மீ முதல் 11.50 கி.மீ வரை உள்ள கட்டுமானங்களை புனரமைக்கும் பணி ரூபாய் 3 கோடியே 15 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், ஆழியார் அணையின் பொள்ளாச்சி கால்வாயில் உள்ள அடுக்குத்தொடர் அமைப்பினைப் புனரமைக்கும் பணி ரூபாய் 4 கோடியே 15 இலட்சம் மதிப்பீட்டிலும்,

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிப்பாளையம் வட்டம், தடப்பள்ளி வாய்க்காலிருந்து மைல் 32-0-570-ல் பிரியும் அம்மாபாளையம் கிளை வாய்க்காலினைப் புனரமைக்கும் பணி ரூபாய் 2 கோடியே 20 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கள்ளக்குறிச்சி மாவட்டம் , சின்னசேலம் வட்டம், கச்சிராபாளையம் கிராமம், கச்சிராபாளையம் கண்மாயின் வரத்து கால்வாயில் நெடுகை 800 மீ முதல் 1570 மீ வரை வெள்ளப் பாதுகாப்புப் பணிகள் ரூபாய் 4 கோடி மதிப்பீட்டிலும்,

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், சமமட்டக்கால்வாயில் சர்க்கார்பதி மின் நிலையத்தின் அடிக்கால்வாய் மற்றும் சீராக்கி மதகினை புனரமைக்கும் பணி ரூபாய் 4 கோடியே 73 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், ஆண்டிபட்டி கிராமத்தில், அம்மாகுளம், புதுக்குளம், இராயகுளம், ஆகிய குளங்கள் மற்றும் குதிரையாறு அணையின் இடது பிரதான கால்வாயினைப் புனரமைக்கும் பணி ரூபாய் 3 கோடி மதிப்பீட்டிலும்,

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், தாராபுரம் பழைய வாய்க்காலின் நெடுகை 10900 மீ முதல் 11200 மீ வரை மற்றும் நெடுகை 16900 மீ முதல் 17050 மீ வரை உள்ள பாதிப்பு ஏற்படக்கூடிய பகுதிகளில் புனரமைப்பு பணி ரூபாய் 1 கோடியே 58 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், ஆயக்குடி கிராமம், பாப்பன்குளம் வாய்க்காலின் நேரடி பாசன மதகுகள் மறு கட்டுமானம் செய்யும் பணி மற்றும் பெரிய வாய்க்கால் சீர் செய்யும் பணி ரூபாய் 5 கோடி மதிப்பீட்டிலும்,

மதுரை மாவட்டம், மதுரை மேற்கு வட்டப் பகுதியில் செல்லும் நிலையூர் கால்வாயின் நெடுகை 7289 மீட்டர் முதல் 11480 மீட்டர் வரை (மேலக்கால் நீரொழுங்கி முதல் காமாட்சிபுரம் பாலம் வரை) புதுப்பிக்கும் பணி ரூபாய் 3 கோடி மதிப்பீட்டிலும்,

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், தாராபுரம் நகரம், கொளிஞ்சிவாடி பழைய வாய்க்காலின் நெடுகை 6500 மீ முதல் 8000 மீ வரை உள்ள பாதிப்பு ஏற்படக்கூடிய பகுதிகளில் புனரமைப்புப் பணி ரூபாய் 2 கோடியே 10 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி, புகளூர் மற்றும் மண்மங்கலம் வட்டங்களில், அமராவதி ஆற்றின் சரகம் 181.440 கி.மீ-ல் தொடங்கும் இடதுகரை வாய்க்காலில், சரகம் 3.044 கி.மீ, 3.710 கி.மீ, 6.600 கி.மீ, 18.900 கி.மீ, 21.900 கி.மீ-ல் அமைந்துள்ள வெளிப்போக்கிகளை புனரமைக்கும் பணி மற்றும் சரகம் 35.900 கி.மீ-ல் புதிதாக வெளிப்போக்கி அமைக்கும் பணி ரூபாய் 4 கோடியே 75 இலட்சம் மதிப்பீட்டிலும்,

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டப் பகுதியில் செல்லும் நிலையூர் கால்வாயின் நெடுகை 1780 மீட்டர் முதல் 7289 மீட்டர் வரை (தென்கரை மடை முதல் மேலக்கால் நீரொழுங்கி வரை) புதுப்பிக்கும் பணி ரூபாய் 4 கோடி மதிப்பீட்டிலும்,

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், அமராவதி பிரதான கால்வாயின் சரகம் மைல் 28/7 முதல் 39/2 வரை உள்ள பகிர்மான கால்வாய்களைப் புனரமைக்கும் பணி ரூபாய் 3 கோடி மதிப்பீட்டிலும்,

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், திருமேனியார் வாய்க்கால் மற்றும் அதன் பிரிவு வாய்க்கால்களைப் புனரமைத்து மேம்படுத்தும் பணி ரூபாய் 12 கோடியே 60 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம், கழியூர் பெரிய ஏரியின் வரத்துக் கால்வாய் தூர்வாரும் பணி மற்றும் செய்யாறு நகரத்தில் உள்ள கொடநகர் ஏரி மற்றும் புளியரம்பாக்கம் ஏரி கால்வாய்களில் தடுப்புச் சுவர் அமைக்கும் பணி ரூபாய் 5 கோடியே 30 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம், முத்துக்குடி, நெய்குப்பை மற்றும் பூங்காவூர் கிராமங்கள், கோணவாய்க்கால் வடிகாலில் உள்ள குறுக்கு கட்டுமானங்களைப் புனரமைத்தல் மற்றும் மறுகட்டுமானம் செய்யும் பணி ரூபாய் 6 கோடியே 30 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

8. பாசன நிலங்களுக்கு நீர் வழங்குவதை உறுதி செய்யவும், நீர் வீணாவதை தடுக்கவும், நான்கு மண்டலங்களிலுள்ள 9 மாவட்டங்களில் பழுதடைந்துள்ள 15 ஏரிகள் மற்றும் அதன் கட்டுமானங்கள் புனரமைப்பு மற்றும் மறுசீரமைப்பு பணிகள் ரூபாய் 69 கோடியே 17 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டம், நரிக்குடி வட்டாரம், திருவிடைநல்லூர் கிராமம், தாமரைக்குளம் கண்மாயின் மடையினை மறுகட்டுமானம் செய்யும் பணி ரூபாய் 12 இலட்சம் மதிப்பீட்டிலும்,

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், செம்பரம்பாக்கம் ஏரியினை மறுசீரமைத்து, மேம்படுத்தும் பணி ரூபாய் 22 கோடியே 95 இலட்சம் மதிப்பீட்டிலும்,

வேலூர் மாவட்டம் மற்றும் வட்டம், சதுப்பேரி ஏரியினை புனரமைத்து மறுசீரமைக்கும் பணி ரூபாய் 19 கோடி மதிப்பீட்டிலும்

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், அமரசீமேந்திரபுரம் கிராமத்தில் உள்ள பெத்தனோடை ஏரி, வளையன்குளம், புதுக்குளம் மற்றும் கொடிவயல் கிராமத்தில் உள்ள கொடிக்குளம் ஆகியவற்றை புனரமைக்கும் பணி ரூபாய் 2 கோடியே 63 இலட்சம் மதிப்பீட்டிலும்,

வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், மாதண்டக்குப்பம் கிராமம், மாதண்டக்குப்பம் ஏரியினை மறுசீரமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 30 இலட்சம் மதிப்பீட்டிலும்,

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், மாத்தூர் கிராமத்தில் உள்ள மாத்தூர் பெரிய ஏரி மற்றும் அரசர்குளம் கிராமத்தில் உள்ள இராமன் ஏரி, வெள்ளாகுளம் மற்றும் பெத்தாக்குளம் ஆகியவற்றை புனரமைக்கும் பணி ரூபாய் 3 கோடியே 68 இலட்சம் மதிப்பீட்டிலும்

தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், பெரும்பத்தூர் கிராமம், பெரும்பத்தூர் பெரிய கண்மாயில் இரண்டாவது மடை மறுகட்டுமானம் செய்யும் பணி மற்றும் பெரும்பத்தூர் அணைக்கட்டில் திருகுமதகு அமைக்கும் பணி ரூபாய் 43 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தொடர்ச்சி 4-ஆம் பக்கம்